கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

**IA.No.1/2023**

**OS.No.67/2021**

மனுதாரர் தரப்பு 1வது சாட்சி கருப்பசாமி என்பவரின் வாக்குமூலம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்பசாமி | சாதி | |
| தகப்பனார் பெயர் | சுந்தரமகாலிங்கம் | சமயம் | இந்து |
| கிராமம் | விருதுநகர் | தொழில் | தனிவட்டாசியர் |
| தாலுகா | விருதுநகர் | வயது | 46 |

நாள் : 14.11.2024

மா.சா.1

முதல் விசாரணை: நான் தற்போது விருதுநகர் இரயில்வே நிலஎடுப்பு தனிவட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்படி லோகநாதன் என்பவர் கையொப்பம் செய்த 2021ம் ஆண்டு ஜூன் மற்றும் செப்டம்பர் மாதம் கருவூலத்தில் தாக்கல் செய்த சம்பளபட்டியல் தாக்கல் செய்கிறேன். மேற்படி லோகநாதன் 2021 ஜூன் மாதம் முதல் டிசம்பர் வரை எங்கள் அலுவலகத்தில் தனிவட்டாட்சியராக பணிபுரிந்தார். அவர் கையொப்பம் செய்த நிலஆர்ஜிதம் செய்ய பரிந்துரைபடிவம் நகல் தாக்கல் செய்கிறேன்.